# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 20, 2021

Weekly E-paper • February 20, 2021




# ஆளுநர் வேலை ‘திவசம்’ செய்வதா?

சுப. வீரபாண்டியன்

**தி.மு.கழகம் ஏன் ஆட்சிக்கு வரவேண்டும்?**
சாரதாதேவி

**நசுக்கப்படும் 69% இடஒதுக்கீடு**
தலையங்கம்

**மாநில உரிமைகளைப் பறிக்கும் மோடி அரசு**
ராஜ்ஸ்ரீ

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 20, 2021

Weekly E-paper • February 20, 2021


# ஆளுநர் வேலை 'திவசம்' செய்வதா?

சுப. வீரபாண்டியன்

அண்மையில், 'பால் பாக்கெட்' புகழ் எஸ்.வி.சேகர், சமூக வலைத்தளம் ஒன்றில் (twitter), உமாநாதன் என்பவரின் பதிவு ஒன்றை மீள் பதிவிட்டிருந்தார். அந்தப் பதிவு இதுதான் --

"கிரண்பேடி புது தில்லி துணைநிலை ஆளுநர் ஆக நியமனம்..

அப்பறம் என்னப்பா.. பாண்டிச்சேரி காங்கிரஸ் ஆட்சிக்கு காரியம் பண்ண மாதிரி டெல்லி ஆம் ஆத்மி ஆட்சிக்கு தவசம் பண்ண கிளம்பிட்டாங்க.."

எதிர்க்கட்சிகளை மிரட்டுவதாக நினைத்துக் கொண்டு, ஆளுநர் பதவியையே இவர்கள் இழிவு படுத்துகின்றனர். கிரண் பேடி தில்லி ஆளுநராக நியமிக்கப்படுவாரா இல்லையா என்பதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும், ஆளுநரின் வேலை இதுதானா என்ற கேவலமான நிலை இந்தியாவில் இப்போது ஏற்பட்டுள்ளது என்பதாகவே இந்தப் பதிவு சொல்கிறது!



புதுவையில் கிரண் பேடி துணைநிலை ஆளுநராக இருந்தபோது, அவர் நடந்துகொண்ட விதம், அந்த ஆட்சிக்கு முடிந்தவரையில் இடையூறு செய்வதாகவே இருந்தது. இதற்காகத்தான் ஆளுநர் பதவி என்றால், அப்படி ஒன்று தேவையில்லை என்றே தோன்றுகிறது.

இந்தியாவில் இப்போது பல மாநிலங்களில், ஒன்று, பாஜக நேரடியாக ஆட்சி செய்கிறது அல்லது, ஆளுநர்கள் மூலம் ஆட்சிக்குத் தொல்லை செய்கிறது. தமிழ்நாட்டிலோ இரண்டும் தேவைப்படவில்லை. அவர்களின் எல்லா வேலைகளையும், முதலமைச்சர் பழனிச்சாமியே பார்த்துக் கொள்கிறார்.

அவர்கள் நேரடியாக ஆட்சி செய்யும் உ.பி., கர்நாடகா போன்ற மாநிலங்களில் சர்வாதிகாரம் முழுமையாகத் தலைவிரித்து ஆடுவதை நாம் பார்க்கிறோம். அண்மையில், கர்நாடாகாவில் அயோத்தி ராமர் கோயிலுக்கு வீடு வீடாகச் சென்று பணம் கேட்டுள்ளனர். தர மறுத்தவர்களின் வீட்டு வாசலில் ஓர் அடையாள ஸ்டிக்கரை



ஒட்டிச் சென்றுள்ளனர். எந்த நேரமும் அந்த வீடு தாக்கப்படும் என்பதற்கான அறிகுறியே அது! அதனைக் கண்டித்த கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமியை இந்து மதத்திற்கு எதிரானவர் என்று பரப்புரை செய்கின்றனர். இந்த அராஜகங்களை எல்லாம் தமிழ்நாட்டில் செய்ய முடியவில்லையே என்பதுதான் பாஜகவின் இன்றைய கவலையாக உள்ளது.

செய்ய வேண்டிய வேலைகளை மத்திய, மாநில அரசுகள் செய்யவில்லை. குறிப்பாக எரிபொருள்களின் விலை - அது பெட்ரோல், டீசல், எரிவாயு என எதுவாயிருப்பினும் - மிகக் கடுமையான ஏற்றத்தில் உள்ளன. இரண்டு நாள்களுக்கு முன் இந்திய எண்ணெய்க் கழகம் (Indian oil corporation) வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரம், இந்த எரிபொருள்களின் அடிப்படை விலை (basic prize) இன்றைய விற்பனை விலையில், வெறும் 41 சதவீதம்தான் என்றும், மத்திய, மாநில அரசுகளின் வரியும், விற்பனையாளரின் சிறு லாபமும் சேர்ந்து 59% என்றும் கூறுகின்றது.

இதனை ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற எண்ணமாவது மத்திய அரசிடம் உள்ளதா? எடுத்துச்சொல்லும் துணிவு தமிழக அரசிடம் உள்ளதா? இரண்டுமே இல்லை என்பதுதானே விடை!

செய்ய வேண்டியவைகளை விட்டுவிட்டு, ஏதோ பெரிதாகச் செய்துவருவது போல ஒரு பாசாங்கு காட்டுகிறது தமிழக அரசு! இன்று முதலமைச்சர் பழனிச்சாமி வெளியிட்டுள்ள ஒரு கேலிக்கூத்தான அறிவிப்பு, "கொரானா ஊரடங்கு விதிகளை மீறியதாகப் பதிவு செய்யப்பட்ட 10 லட்சம் வழக்குகள் ரத்து" என்பதாகும்!

அந்த வழக்குகள் எல்லாம் என்ன பெரிய கொலை, குற்ற வழக்குகளா? உண்மையான கொலை வழக்கு சாத்தான்குளத்தில் நடைபெற்ற இரட்டைக் கொலை வழக்குதானே! போகிற போக்கில், அதனையும் ஊரடங்கு காலத்தில் விதியை மீறிய வழக்குப் பட்டியலில் சேர்த்து, ரத்து செய்தாலும் செய்து விடுவார்கள்!

ஒன்றை நினைவில் கொள்வோம்! வரும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், ஒரே ஒரு இடத்தில் கூட பாஜக வெற்றி பெற்றுவிடக்கூடாது. அதிமுக கூட்டணியில் இருப்பதால், கட்டுத்தொகையை (டெபாசிட்) வேண்டுமானால் மீட்டுக்கொண்டு போய்த் தொலையட்டும்!

# தி.மு.கழகம் ஏன் ஆட்சிக்கு வரவேண்டும்?

சாரதாதேவி

தமிழகம் ஆசியப் பகுதியில் உயர்ந்த மனித வளமும், நிறைந்த இயற்கை வளமும் கொண்ட ஒரு நிலமாகும். இந்நன்னிலத்தை ஒரு நூறாண்டு முன்னே செலுத்தியப் பெருமை, நீதிக்கட்சியின் பார்ப்பனரல்லாதார் அரசியலையும், தந்தை பெரியார் முன்னெடுத்த திராவிடக் கருத்தியலை தழைக்கச் செய்த கழக அரசியலையும் சேரும்.

1920களில் தொடங்கிய இந்தக் கருத்தியல் ஒரு நூறாண்டு கோலோச்சியதால் தமிழகம் அடைந்த நன்மைகள் ஏராளம். இன்றைக்கு உலகின் பல்வேறு நாடுகளின் அறிவுக் கருவூலமாக, உழைப்பு முதலீடாகத் தமிழர்கள் திகழ்கின்றனர். அதற்கு பல சமூக, மத மூடநம்பிக்கைகளை, பத்தாம் பசலித்தனங்களை, கட்டுப்பாடுகளை தமிழர்கள் துணிந்து உடைத்து முன்னேறியதே காரணம். அந்தத் துணிவையும், பரந்த முற்போக்குச் சிந்தனைகளையும் தமிழரின் மனதில் விதைத்ததுதான் திராவிடக் கருத்தியலின் சாதனை.

பாழாய்ப்போன பத்தாண்டுகள் தந்தை பெரியாரின் வழியில் 50 ஆண்டு காலம் ஆட்சி செய்து, ஓரிரு தலைமுறைகள் முன்னேறிய தருணத்தில், முதல் கட்ட, இரண்டாம் கட்டத் தலைவர்களைச் சோர்வும் முதுமையும் வரவேற்றன. அடுத்த கட்டத் தலைவர்கள் உருவாகும் முன்பே அவர்களைச் சிதைக்க ஆரியப் பார்ப்பனீயம் போட்ட திட்டம் தான் 2ஜி எனும் ஜோடனை வழக்கு. குறிப்பாக ஆ.ராசா, கனிமொழி, மாறன் ஆகியோரைப் பதம் பார்த்தனர் எதிரிகள். அந்தக் கலக்கத்தில், குழப்பத்தில் நெடுநாள் நட்புகளும் விலக, தனித்து விடப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகம்.

2011 தேர்தலைக் குறிவைத்து வீசப்பட்ட அந்த சதி வலை, சரியாகத் தன் வேலையைச் செய்தது. திராவிட இளம் தலைமுறை, தன் மீது விழுந்த சதி வலையை அவிழ்க்குமுன், என்றுமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒடுக்கப்பட்ட முகத்தைப் பொறுக்காத ஆதிக்கச் சாதியினர், தம் ஆண்ட பெருமையைத் தக்கவைக்க உருவாக்கிக்கொண்ட தமிழ்த்தேசிய அரசியலை வளர்க்க இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். அண்டை நாட்டில் நடந்த கோரப் போரில் கையறு நிலையில் நிறுத்தப்பட்ட கலைஞரை வேண்டுமட்டும் களங்கப்படுத்தினர். மறுபுறம் போரைக் கொண்டாடிய, ஜெயலலிதா அம்மையாரின் பக்கம் நின்றனர். சில்லறைகளாகச் சிதறடிக்கப்பட்ட தமிழ், தமிழர் குறித்த வீர வசனங்களும், ஆண்ட பெருமைகளும் ஒரு கட்டத்தில் இம்மண்ணில் கலந்து வாழ்ந்து வந்த பிற மொழியினரை, குறிப்பாகத் தெலுங்கரை வந்தேறிகளாக பகைவராக அடையாளங்காட்டுவதில் குவிந்தது. சாதி அடையாளமாகி, அதுவே பெருமையாகி, வீர வன்னியன், தேவேந்திர வேளாளன், சோழப் பறையன் என போலியான அடைமொழிகளில் தஞ்சம் புகுந்தனர் இளைஞர்கள்.

தமிழக இளைஞர்களைத் திசைத் திருப்பும் வேலையைச் செவ்வனே செய்து முடித்த பார்ப்பனியம், பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கவும், பிற்படுதப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் இடஒதுக்கீட்டைப் பறிக்கவுமான தன் நோக்கங்களை ஆளும் அ.தி.மு.க வை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, கொஞ்ச கொஞ்சமாக நிறைவேற்றி வருகிறது. தமிழக வேலை வாய்ப்புகளையும், உயர்கல்வி வாய்ப்புகளையும் தமிழர் அல்லாத வடமாநிலத்தார் அனுபவிக்கவும் அடையவும் புறவழியே வாயில்கள் ஏற்படுத்தி வருகின்றனர்.

இப்படிப் பாழாய்ப்போன பத்தாண்டுகளையும், மாநில உரிமைகளையும் மீட்க தி.மு.க மீண்டும் ஆட்சிக்குவரவேண்டும்.

### தி.மு.க தலைவரின் முழக்கங்கள்

கொரோனா காலத்தில் தொடங்கி ஒன்றிணைவோம் வா, ஸ்டாலின் தான் வாராரு; விடியல் தரப் போறாரு, அ.தி.மு.கவை நிராகரிப்போம் போன்ற முழக்கங்களுடன் தமிழக மக்களின் நெஞ்சில் நிறைந்து வரும் தளபதி ஸ்டாலின் அவர்கள், கிராம சபைக் கூட்டங்கள், முதல் நூறு நாள்களில் மக்கள் குறை தீர்ப்பு, விவசாய, கல்விக் கடன்கள் ரத்து என அதிரடித் திட்டங்களால் தமிழக அரசியல் சூழலை ஒரு கலக்கு கலக்கி வருகிறார். ஸ்டாலின் வாய்ச் சவடால்காரர் அல்ல. அவர் சொன்னதைச் செய்வார்.

தி.மு.க தலைவர் ஆட்சிக்கு வந்து செய்வதாகச் சொல்வதை அ.தி.மு.க அரசு இப்போதே செய்வதாக 110 விதியின் கீழ் அறிவிப்புகள் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

தமிழகம் முழுவதும் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி, மீண்டும் சமத்துவபுரங்கள் என கலைஞர் விட்டுப்போனப் பொறுப்புகளைச் சுமக்க ஸ்டாலின் அணியமாகிவிட்டார். அவர் பதவிக்கு முன்பாகவே பொறுப்பெடுத்த அழகை மூத்த தலைமுறையினர் வாஞ்சையுடன் பார்த்து ரசிக்கிறார்கள்.

### கலைஞரின் நிறைவேறாக் கனவுகள்

'உன் எதையும் தாங்கும் இதயத்தைக் கொடு' என்று சொன்னார் கலைஞர், அண்ணாவின் பேருறக்க இரங்கலில். அதோடு கலைஞரின் சக்தியில் பாதியைக் கேட்டார் தளபதி, கலைஞரின் நிறைவேறாத கனவுகளையும் இலட்சியங்களையும் நிறைவேற்றிட அவருடைய இரங்கலில்...

அந்தக் கனவு, அந்த இலட்சியம், தமிழகத்தை ஆசியாவின் தலைசிறந்த மாநிலமாக முன்னேற்றுவது. சாதி மத பேதங்கள் ஒழிந்த சமத்துவபுரமாக தமிழகமே மாறுவதைக் காண்பது. தமிழ்மொழியையும், தமிழ் நிலத்தையும், தமிழக மக்களையும் சமூக நீதி தழைக்க முதன்மையாக்கிக் காட்டுவது என்ற உயர்ந்த அந்த இலட்சியத்தை அடையவும், உடனடியாகத் தமிழகத்தைப் பின்னோக்கி இழுக்கும் ஆற்றல்களைக் கட்டுப்படுத்தவும் தி.மு.க ஆட்சிக்கு உடனடியாக வரவேண்டும். அதற்கான முதுகெலும்பும், 'நா'ணயமும் பெற்ற கட்சி தி.மு.க மட்டுமே!



தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நசுக்கப்படும் 69% இடஒதுக்கீடு

எம்.டெக் படிப்புகளில் இந்த ஆண்டு மத்திய அரசின் இடஒதுக்கீட்டை அண்ணா பல்கலைக்கழகம் பின்பற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மாநில அரசின் 69% இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இத்தனை ஆண்டுகள் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்த நிலையில் இந்த ஆண்டு குழப்பம் ஏற்படுத்தி இடஒதுக்கீட்டை நசுக்கும் வேலையைச் செய்திருக்கிறது பார்ப்பனீய மோடி அரசு.

ஆளுநர், துணைவேந்தர் போன்ற நியமனப் பதவிகளை வைத்து மாநிலங்களின் உரிமைகளில் மூக்கை நுழைத்து, மத்திய அரசு பல்வேறு இடையூறுகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வியுரிமையைப் பறிக்கும் வகையில் அவர்களுக்கான இடஒதுக்கீட்டை இல்லாமல் செய்யத் தொடந்து அரசியல் அமைப்பிற்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது மத்திய பாஜக அரசு.

மத்திய அரசின் 49.5% இடஒதுக்கீடு அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்திக்கொள்ள அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் தரப்பில் ஒப்புதல் வழங்கியுள்ளதாக அண்ணா பல்கலைக்கழகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு மத்திய அரசின் 49.5% இடஒதுக்கீடு அடிப்படையில், மாணவர் சேர்க்கையை அண்ணா பல்கலைக்கழகம் தொடங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இடஒதுக்கீடு பற்றி அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் சொல்வதை ஏற்றுக்கொள்வதானால் எதற்கு இங்கு மாநில அரசு 69% இடஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்? இவ்வளவு அப்பட்டமாக அண்ணா பல்கலைக்கழகம் மாநில அரசை மதிக்காமல் செயல்படுவது ஆளும் அதிமுக அரசின் பலவீனத்தைக் காட்டுகிறது. இதனால் பாதிக்கப்படுவது பார்ப்பனர் அல்லாத மாணவர்கள்தான்.

ஆட்சி மாற்றம் நடைபெற்றுத் தி.மு.கழக அரசு அமைந்தவுடன் தமிழ்நாட்டில் கல்வி வேலை வாய்ப்புகள் அனைத்திலும் 69% இடஒதுக்கீடு நிலைநாட்டப்படும் நாள் விரைவில் வரும். ●

நந்தனம் புத்தகக் கண்காட்சியில்

## கருஞ்சட்டைப் பதிப்பகம் (புதிய வெளியீடுகள்!)

**24/02/2021 - 09/03/2021**



















ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**
**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**
மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**
டுவிட்டர்: **suba_vee**
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# நிறைவு பெறுகிறது பேரவையின் இணையக் கருத்தரங்கம்

● உதயகுமார் - கார்த்திக்

கொரோனா என்னும் கொடிய நோய்த் தொற்று மனித சமூகத்தை வீடுகளுக்குள் முடங்க வைத்த சூழலில்தான் நம்முடைய பேரவையின் சார்பாக 'ZOOM' செயலி வழியாக இணையக் கருத்தரங்குகளை நடத்தத் தொடங்கினோம். இதற்கான முன்னெடுப்பைச் செய்தது பேரவையின் தோழர் கார்த்திக் ஆவார். 2020 ஏப்ரல் 12ஆம் தேதி "மருத்துவமும் திராவிடமும்" என்னும் தலைப்பில் முதல் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மருத்துவர் எழிலன் அவர்கள் இணையக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். ஒவ்வொரு வாரமும் புதன், சனி மற்றும் ஞாயிறு எனத் தொடர்ந்து கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. ஊரடங்கில் தளர்வுகள் வந்த பின்னர் வாரத்திற்கு இரண்டு நாள்கள் எனவும் பின்னர் ஒவ்வொரு சனிக்கிழமை எனவும் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

சமூகநீதி, பெண்ணியம், பகுத்தறிவு, அரசியல், தத்துவம், வரலாறு, சட்டம், சூழலியல், இலக்கியம், மருத்துவம், பொருளாதாரம், நடப்பு நிகழ்வுகள் என 66 தலைப்புகளில் இணையக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. துறை சார்ந்த வல்லுநர்கள், ஆய்வறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், இளம் பேச்சாளர்கள் கருத்துரை ஆற்றியிருக்கின்றனர்.

பெரிய அளவில் பேசப்படாத பழங்குடியின மக்களின் கல்வி உரிமை குறித்து அவர்களிடையே பணியாற்றும் ஆசிரியர் மகாலட்சுமி அவர்கள் நம்முடைய கருத்தரங்கில் உரையாற்றினார். அதே போல் சர்வதேச அளவில் மிகப்பெரிய ஒடுக்குமுறையாக உருவெடுத்த கருப்பினத்தவரான ஜார்ஜ் ஃப்லாய்ட், அமெரிக்கக் காவல் துறையினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதையொட்டி, "நிறவெறிப் பேரிடர்" என்னும் தலைப்பில் அமெரிக்காவின் "Black Nonbeleivers" அமைப்பின் தலைவர் திரு. மண்டிசா தாமஸ் அவர்கள் நம் கருத்தரங்கில் உரையாற்றினார்.

பல்வேறு இணையக் கருத்தரங்குகள் இரங்கல் செய்தியோடு தொடங்கப்பட்டன. இந்த நிலையில் நம்மை ஒன்றாக இணைத்து, சோர்ந்துவிடாது தொடர்ந்து செயல்பட ஊக்குவிப்பதாகவும், மாலைநேர வகுப்புகளாகவும் கருத்தரங்குகள் நடைபெற்றன. மனித சமூகம் எதிர்கொண்ட பெரும் சவாலில் இருந்து தற்போது நாம் மீண்டும் புறவெளியில் செயலாற்றத் தொடங்கியிருக்கிறோம். தொடர்ந்து நம்முடைய பேரவை, படிப்பு வட்டம், புத்தகக் கண்காட்சி, தேர்தல் பரப்புரை எனப் பல்வேறு வடிவங்களில் செயல்பட இருக்கிறது. இதுவரை இணையத்தில் சந்தித்து உரையாடியதிலிருந்து நாம் மீண்டும் நேரில் இணைந்து செயலாற்ற வேண்டிய நிலையில் இணையக் கருத்தரங்குகளை இன்றுடன்(20-02-2021) நிறைவு செய்கிறோம். மொத்தம் 66 கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன என்பதை மகிழ்வுடன் பதிவு செய்கிறோம்.

சிறப்புப் பேச்சாளர்களுக்கும், கருத்தரங்கில் தொடர்ந்து இணைந்து ஆதரவு கொடுத்த அனைத்துத் தோழர்களுக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றி. ●



**"கெட்டதிலும் ஒரு நல்லது என்பது போல, இந்தக் கொரோனா ஊரடங்கு எமக்கு அளித்த அரிய வாய்ப்பு, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் இணையக் கருத்தரங்குகளில் பங்குபெற்றதாகும். பல்வேறு நல்ல தலைப்புகளின்கீழ் நடைபெற்ற அனைத்துக் கருத்தரங்கங்களும், அதனைத் தொடர்ந்த கேள்வி-பதில் நேரமும் உறங்கிக் கிடந்த சிந்தனைகளைத் தட்டி எழுப்பும் வண்ணம் இருந்தன. அநேகக் குடும்பங்கள் பெண்களுக்கான சுயமரியாதையையும், அவர்களுக்கானப் புறவெளியையும் அனுமதிப்பது இல்லை. இன்று பெண்களால் படிக்க முடிகின்றது. ஆனால் குடும்பங்கள் மிக விரைவிலேயே படிப்பின் மூலம் வளர்ந்த எங்களின் சிறகுகளை வெட்டிவிடுகின்றனர். குடும்பம் என்ற கூட்டினுள் அடைபட்டவர்களுக்கும் இணையக் கருத்தரங்குகள் மூலம் 'சிந்தனை' என்னும் சிறகுகளைப் பரிசளித்த திராவிட இயக்கத் தமிழர் பேரவைக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்**

- .திவ்யா(ஆங்கிலப் பேராசிரியர்)

# மாநில உரிமைகளைப் பறிக்கும் மோடி அரசு

● ராஜ்ஸ்ரீ

நாட்டின் பன்முகத் தன்மையை அழித்து நாடுமுழுவதும் ஒற்றைப் பண்பாட்டு முறையின் மூலம் பார்ப்பனிய மேலாண்மையை நிலைநிறுத்துவதே ஆர்.எஸ்.எஸ்.இன் நோக்கம். கடந்த ஏழு ஆண்டுகளாகத் தங்களின் ஆட்சி அதிகாரத்தால் மக்களிடம் வெறுப்புணர்வைத் தூண்டி இந்துத்துவத்தை நிலைநிறுத்த முயல்கிறது மோடி அரசு. தேர்தல் வெற்றி என்பது மட்டுமே ஆர்.எஸ்.எஸ்.இன் குறிக்கோளாக என்றுமே இருந்தது இல்லை, ஏனெனில் இரண்டாயிரம் ஆண்டுகளாக அதிகாரத்தின் உச்சியில் அவர்கள்தான் இருந்து வருகிறார்கள்.

தேசிய அளவில் காங்கிரஸ் போன்ற ஓர் பேரியக்கத்தை வீழ்த்தித் தங்களின் இருப்பை நிலைநாட்டிவிட்டனர். இப்போது தாங்கள் வேரூன்றா மாநிலங்களைக் குறிவைத்துப் பல்வேறுத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். தென்னிந்திய மாநிலங்களில் குறிப்பாகத் தமிழகம் மற்றும் கேரளா தற்போதும் பார்ப்பனியத்திற்கு எதிரான மனநிலையில் இருப்பதால் மதரீதியாக மக்களை ஒன்றுதிரட்டவே தேர்தல் நேரத்தில் சபரிமலை பிரச்சனையைக் கேரளத்திலும், முருகர் பிரச்சனையைத் தமிழகத்திலும் கையில் எடுத்தார்கள். அது எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை என்றாலும் மாநிலக் கட்சிகளிடையே சலனத்தை ஏற்படுத்தியது.

ரஜினியை வைத்து தி.மு.க. வாக்கு வங்கியைப் பிரிக்க திட்டம் வகுத்தார்கள், ஆனால் அதுவும் தோல்வியில் முடியவே, தலைமையற்ற கட்சியான அ.தி.மு.க.வைக் கையில் எடுத்துள்ளார்கள். தமிழக அரசைத் தங்களின் கைப்பாவையாக வைத்துக் கொண்டு மாநில உரிமைகளைப் பறிக்கும் திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். நீட், புதிய கல்விக் கொள்கை போன்றவைகள் நம் கண்முன் நடந்த உதாரணங்கள்.

தன் கையை வைத்தே தன் கண்ணைக் குத்துவதுபோல, ஒரு திராவிடக் கட்சியை வைத்தே இன்னொரு திராவிடக் கட்சியான தி.மு.க வை வீழ்த்த நினைக்கிறது பார்ப்பனியம். அவர்களின் திட்டப்படி அ.தி.மு.க வுடன் கூட்டணி வைத்து, பா.ஜ.க தமிழகத்தில் நுழைய முயல்கிறது. பெரியாரின் வழிவந்த நாம் அவர்களின் திட்டத்தை மக்களிடம் அம்பலப்படுத்துவது நம் கடமை. ●

## தேதி மாற்றம்!

**இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டத் தொடக்க விழாவும், திரு. ஆ.இராசாவின் நூல் அறிமுக விழாவும் 22-02-2021 திங்கள் மாலை 6 மணிக்கு, சென்னை இராயப்பேட்டை, இந்திய அலுவலர் சங்கத்தில் நடைபெற உள்ளது.**

– கே.ராஜன்,
இயக்குனர், கருஞ்சட்டைப்பதிப்பகம்

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,